# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1805 - 2013 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2013.04.05

*1805 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி* III *– காணிகள்*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 72 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 72 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) ஸ்ரீலங்கா ஹிரா பௌன்டேஷன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தை இரத்துச்செய்தல் (பிரிவு 104) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின்கீழ் பது/பிர 1728 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்பு பண்டாரவளை ஒடஎல்ல முகவரியில் வசிக்கும் உலுகெதர இரத்னாயக்க முதியன்சேலாகே புஞ்சிரால என்பவருக்கு 1947, மாச்சு 12 ஆந் திகதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இந்தப் பற்று நிலம் பதுளை மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் எல். டீ. ஓ. 90 ஆம் இலக்கத்தின்கீழ் 1955.07.25 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பற்று நிலத்திற்குச் சட்டமுறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ அல்லது பின்னுரிமையாளர் இருந்தும், அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ, பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், ஊவா மாகாண சபையின் பண்டாரவளை பிரதேச செயலாளராகிய டீ. எம். இந்திரா திசானாயக்க ஆகிய நான், மேலே சொல்லப்பட்ட அளிப்புப்பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின்கீழ், இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இந்த நடவடிக்கையை எதிர்த்து ஏதும் ஆட்சேபனை இருந்தால் அதை 2012 ........................ ஆந் திகதிக்கு முன்னதாக எனக்கு எழுத்துமூலம் அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

பதுளை நிருவாக மாவட்டத்தின் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவின் மகா பளாத பற்றில்/கோறளையில் ஒடஎல்ல கிராமசேவை அலுவலரின் பகுதியில் உள்ள ஹிபுடுவெல்கொடபத்தன கிராமத்தில் அமைந்துள்ளதும், பதுளை மாவட்ட அளவையாளர் என அழைக்கப்படுவதும், நிலஅளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு அளவையியல் அதிகாரசபையின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள ............................... ஆம் இலக்க களத்தாளில், இலக்க வரைபடத்தில்/ அவர்களால் தயாரிக்கப்பட்ட ......................................... ஆம் இலக்கத் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ................................................ அவர்களால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ. 119 ஆம் இலக்க உருவப்படத்தில் 05AJ ஆம் இலக்கக் காணித்துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் ஹெக்டெயர் ......................................... ஏக்கர், 02 றூட், 15 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழ்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி-

வடக்கில் : 05ஏ[1] ;
கிழக்கில் : 05ஏஎல் ;
தெற்கில் : 05ஏகே ;
மேற்கில் : 05ஏஎல்.

டி. எம். இந்திரா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பண்டாரவளை.

2012.08.29.

4-201

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/18949
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சீபீ/பீஎல்சீ/2/3/16.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில் இல. 67, மதவாச்சி மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மதவாச்சி கிராமத்தில் அமைந்துள்ள இறுதிக் கிராம வரைபட இல. 113 இல் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட சுமார் 0.106 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய அரச காணித்துண்டொன்றை வர்த்தக நோக்கத் திற்காக திரு. வெல்ஹேன்கொடகே விமல் பிரியசாந்த என்பவர் குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணப்பித்துள்ளார் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பிரதேச சபை வீதி ;
கிழக்கு : அரசாங்கக் காணி ;
தெற்கு : நிசாந்த மகதிவுல்வெவ உரிமை கோரும் காணி ;
மேற்கு : அரசாங்கக் காணி.

விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியை தேவையான நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே, அரசாங்கத்தின் நியம நிபந்தனைகளுக்கும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் 1995 ஆம் வருடத்தில் காணியின் வர்த்தகப் பெறுமதியில் 4 % வீதமாகும். இக்குத்தகைத் தொகை ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டுமென்பதுடன், அது முந்திய 5 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட குத்தகைத் தொகையில் 50% இற்குக் குறையாதிருத்தல் வேண்டும் ;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% வீதத்தைப் போன்று மும்மடங்காகும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கத்தைத் தவிர வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது ;

(இ) குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளர் திருப்திப்படும் வண்ணம் குத்தகைக்காரரினால் இக்காணி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணிச் செல்லப்படல் வேண்டும் ;

(உ) பிரதேச செயலாளரினாலும் பிற நிறுவனங்களினாலும் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படுதல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது காணியைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை அடைவதற்கு குறித்த காலப்பகுதியில் குத்தகைக்காரர் தவறும் பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2010.02.11 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருட ஆகக் குறைந்த குத்தகைக்காலம் முடிவதற்கு முன்பதாக கீழ்க் குத்தகை வழங்க முடியாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தம் தானாகவே இரத்தாகும்.

இங்கு கீழ்க்காணும் திகதியிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள், குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்கான தகுந்த காரணங்கள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்கப்படாத பட்சத்தில் கோரிக்கைக்கு அமைவாக இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
''மிஹிகத்த மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.03.13.

4-06

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/23243
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சீபீ/பீஎல்சீ/2007/06/15/4.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், மத்திய நுவரகம்பலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், இல. 293 - பண்டுலகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், பொத்தானேகம கிராமத்தில் அமைந்துள்ள, இ. கி. வ. இல. 276 இல் துண்டு இல. 52 எனக் காட்டப்பட்ட சுமார் 0.0480 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய அரச காணித் துண்டொன்றை வீடமைப்பு நோக்கத்திற்காக திரு. ஹேரத் முதியன்சேலா கனேகெதர ருவண் விஜேவர்தன என்பவர் குத்தகைக்குத் தருமாறு விண்ணப்பித்துள்ளார் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : துண்டு இல. 53 உம், 51 உம் ;
கிழக்கு : துண்டு இல. 51 ;
தெற்கு : துண்டு இல. 49 ;
மேற்கு : துண்டு இல. 55.

விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியை தேவையான நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே, அரசாங்கத்தின் நியம நிபந்தனைகளுக்கும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு எண்ணியுள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் 1995 ஆம் வருடத்தில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியில் 4 % வீதமாகும் ;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% வீதத்தைப் போன்று மும்மடங்காகும்.

(ஆ) குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து 01 வருட காலப்பகுதிக்குள் பிரதேச செயலாளர் திருப்திப்படும் வண்ணம் குத்தகைக்காரரினால் இக்காணி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வீடமைப்பு நோக்கத்தைத் தவிர வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளரினாலும் பிற நிறுவனங்களினாலும் விதிக்கப்பட்டுள்ள பிற விசேட நிபந்தனைகளுக்கும் இந்நீண்டகாலக் குத்தகை கட்டுப்படுதல் வேண்டும் ;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணிச் செல்லப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது காணியைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை அடைவதற்கு குறித்த காலப்பகுதியில் குத்தகைக்காரர் தவறும் பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2012.12.20 ஆந் திகதியிலிருந்து 05 வருட ஆகக் குறைந்த காலம் முடிவதற்கு முன்பதாக கீழ்க்குத்தகை வழங்க முடியாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தம் தானாகவே இரத்தாகும்.

இங்கு கீழ்க்காணும் திகதியிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள், குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்கான தகுந்த

காரணங்கள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்கப்படாத பட்சத்தில் கோரிக்கைக்கு அமைவாக இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்ஹ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.03.13.

4-50

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/21877
மாகாண/பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : 5/2/7/ஹபு/79 ஆம்.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

பதுளை மாவட்டம், அப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உமங்கந்துறை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கெபிதிகொல்லாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 115 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 408 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 00ஏக்கர் 00றூட் 00 பேர்ச்சஸ் 0.0390 ஹெக்டெயர் விஸ்தீரண முள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திருமதி வீரசிங்க முதியன்சேலாகே சாந்தி பத்மா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத் தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இல. 408 ;
கிழக்கு : காணித்துண்டு இல. 408 ;
தெற்கு : காணித்துண்டு இல. 408 ;
மேற்கு : காணித்துண்டு இல. 408.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்குத் தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2010.02.12 ஆந் திகதி தொடக்கம் 5 வருடங்கள் முடியும்வரை, குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் அல்லது இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ள நோக்கத்தைப் பூர்த்திசெய்வதற்காகக் கீழ்க்குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்தல் தவிர்ந்த வேறு கீழ்க்குத்தகைக்கு அல்லது கைமாற்றத்திற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. இதன் குத்தகை முறிக்கான அளிப்புப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் உரிமை 2010.12.12 ஆந் திகதியிலிருந்து 5 வருடங்கள் முடிவடைந்த பின்பு கிடைக்கும் ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஒ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்ட காலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.03.08.

4-85

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/35911
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : மாகாண/காஆ/06/01/கிராமம்/225.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கம்பஹா மாவட்டம், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 176-வத்தளை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வத்தளை எனும் கிராம இல. கிராம/வத்/2009/87 ஆம் வரைபடத்தில் அமைந்துள்ளதும் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0134 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. குலத்துங்க ஆராச்சிகே தொன் விஜயராஜ் அன்டனி என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பி. டபிள்யூ. குணசேகர உரிமை கோரும் கொரக்காய்த் தோட்டம் மற்றும் வீதி ;
கிழக்கு : வீதி மற்றும் கே. கே. சோமாவத்தி உரிமை கோரும் கொரக்காய்த் தோட்டம் ;
தெற்கு : காணித்துண்டு இல. 02 ;
மேற்கு : காணித்துண்டு இல. 02 மற்றும் பி. டபிள்யூ. குணசேகர உரிமைகோரும் கொரக்காய்த் தோட்டம்.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்குத் தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து 05 வருடங்களாகிலும் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஒ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்ட காலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

சத்துர சமரசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.03.20.

4-264

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/36348
உதவிக் காணி ஆணையாளரின்
இல. : என்ஜீ/28/04/02/01/366.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

மன்னார் மாவட்டம், மன்னார் நகரம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முருங்கன் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த முருங்கன் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குடியேற்ற அலுவலரின் வரைபடத்தில் ஹெக்டெயர் 0.1720 பிரமாண அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு தேசிய லொத்தர் சபை விண்ணப்பித்துள்ளதென இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : முன்பதிவு செய்யப்பட்ட காணி ;
கிழக்கு : முன்பதிவு செய்யப்பட்ட காணி ;
தெற்கு : முன்பதிவு செய்யப்பட்ட காணி ஜுப்லி வீதி ;
மேற்கு : தனியார் காணி.

*3.* குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2013.02.19 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2013 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% குறையாமல் இருத்தல் வேண்டும்.

*தண்டப்பணம்.*- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்குத் தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து 05 வருடங்களாகிலும் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

*4.* இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவணி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.03.18.

4-202

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/27361
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : இகொ/12/கா/தீ.ப.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், காலி கடவத் சதர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 101 மாயிடிபே கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாயிடிபே எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பி. பி. கா 3271 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0514 ஹெக்ரேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு மக்கள் வங்கி - கராபிட்டிய கிளை விண்ணப்பித்துள்ளதென இத்தால் அறியத்தரப் படுகிறது.

*2.* விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பி. பி. கா 1907 இல் காணித்துண்டு இலக்கம் 2 மற்றும் பி. பி. கா 1256 இல் காணித்துண்டு இலக்கம் 11 ;
கிழக்கு : பி. பி. கா 1256 இல் காணித்துண்டு இலக்கம் 11 மற்றும் பி. பி. கா 1907 இல் காணித்துண்டு இலக்கம் 2 ;
தெற்கு : பி. பி. கா 1256 இல் காணித்துண்டு இலக்கம் 11 மற்றும் பி. பி. கா 1907 இல் காணித்துண்டு இலக்கம் 2 ;
மேற்கு : பி. பி. கா 1907 இல் காணித்துண்டு இலக்கம் 2 மற்றும் பி. பி. கா 1256 இல் காணித்துண்டு இலக்கம் 11.

*3.* குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த 2012.07.04 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2012 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வீதமாகும். இக்குத்தகைத் தொகை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டும் என்பதுடன், அது முடிந்த 5 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட குத்தகைத் தொகையில் 50% வீதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

*தவணைப்பணம்.*- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்குத் தொகை தவணைப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(ஈ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஐ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும்போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்டகாலக் குத்தகை இரத்துச்செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும் ;

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.03.18.

4-137

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/26222
மாகாண/பிரதிக் காணி ஆணையாளரின்
இல. : இகொ/12/கா/அம்/தீ.ப.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், அம்பலங்கொடை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 75ஈ, நவகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தங்கெட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ஜீஏ/ஏஎம்பி/00/76எச் ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் ஏ எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.047 ஹெக்ரேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகத் திரு. குணசேகர விதானலாகே காமினி பெர்னாந்து என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பி. பி. 35 இல் காணித்துண்டு இலக்கங்கள் 61, 63 மற்றும் வீதி ;
கிழக்கு : வீதி ;
தெற்கு : பி. அடையாளமிடப்பட்ட காணித்துண்டு ;
மேற்கு : பி. பி. 35 இல் காணித்துண்டு இலக்கங்கள் 64, 61 மற்றும்

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

*தண்டப்பணம்*.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்குத் தொகை தண்டப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து 5 வருடங்கள் முடியும்வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும் ;

(ஒ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும்போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்டகாலக் குத்தகை இரத்துச்செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும் ;

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2013.03.18.

4-136

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/34962
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : ஈபீ/28/எல்ஈஎஸ்/ரீஆர்ஜ/ரீஎச்/349.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவில் இல. 228, புதுக்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவில் புதுக்குடியிருப்பு கிராமத்தில் அமைந்துள்ள எஸ். ரீ. பீ. 06 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 9055 எனக் காட்டப்பட்ட சுமார் 0.6210 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய அரச காணித்துண்டொன்றை கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கத்திற்காக தம்பலகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணபிக்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : துண்டு இலக்கம் 9058 உம் 9059 உம் ;
கிழக்கு : துண்டு இலக்கம் 9059 மற்றும் 2355 (புகையிரதப் பாதை ஒதுக்கம்) ;
தெற்கு : துண்டு இலக்கம் 2355 (புகையிரதப் பாதை ஒதுக்கம்), துண்டு இல. 9056 மற்றும் துண்டு இல. 9057 (வீதி ஒதுக்கம்) ;
மேற்கு : துண்டு இலக்கம் 9058 மற்றும் துண்டு இலக்கம் 9057 (வீதி ஒதுக்கம்).

விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியை தேவையான நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும். எனவே, அரசாங்கத்தின் நியம நிபந்தனைகளுக்கும் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2012.09.20 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் காணி சட்ட ரீதியாகக் கையளிக்கப்பட்ட 2012 ஆம் வருடத்தில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியில் 2% வீதமாகும் ;

தவணைப்பணம்.- இல்லை.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி கூட்டுறவுச் சங்கத்தின் கட்டிடங்கள் அமைக்கும் நோக்கத்தைத் தவிர வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படுதல் கூடாது ;

(இ) குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளர் திருப்திப்படும் வண்ணம் குத்தகைக்காரரினால் இக்காணி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) பிரதேச செயலாளரினாலும் பிற நிறுவனங்களினாலும் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்படுதல் வேண்டும் ;

(உ) அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள் சிறந்த முறையில் பேணிச் செல்லப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது காணியைப் பெற்றுக்கொண்ட நோக்கத்தை அடைவதற்கு குறித்த காலப்பகுதியில் குத்தகைக்காரர் தவறும் பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2012.09.20 ஆந் திகதியிலிருந்து ஐந்து (05) வருட ஆகக் குறைந்த குத்தகைக்காலம் முடிவதற்கு முன்பதாக கீழ்க் குத்தகை வழங்க முடியாது ;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்வதற்குத் தவறும் பட்சத்தில் குத்தகை ஒப்பந்தம் தானாகவே இரத்தாகும்.

இங்கு கீழ்க்காணும் திகதியிலிருந்து 06 வார காலப்பகுதிக்குள், குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்கான தகுந்த காரணங்கள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்கப்படாத பட்சத்தில் கோரிக்கைக்கு அமைவாக இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணி செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.03.20.

4-263

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி கிடைக்கப்பெறாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்ளார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 05.04.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.03.2013 |
| | | வெள்ளி | 12.04.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.03.2013 |
| | | வெள்ளி | 19.04.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.04.2013 |
| | | வெள்ளி | 26.04.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.04.2013 |
| **மே** | .. | வெள்ளி | 03.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.04.2013 |
| | | வெள்ளி | 10.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.04.2013 |
| | | வெள்ளி | 17.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.05.2013 |
| | | வியாழன் | 23.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.05.2013 |
| | | வெள்ளி | 31.05.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.05.2013 |
| **யூன்** | .. | வெள்ளி | 07.06.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.05.2013 |
| | | வெள்ளி | 14.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.05.2013 |
| | | வெள்ளி | 21.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.06.2013 |
| | | வெள்ளி | 28.06.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.06.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.